### ஆட்சிக்கு வந்த பிறகு, ‘கால அவகாசம் கொடுங்கள்’ என்று தட்டிக்கழித்தால்,

# திருப்பூரின் ஒட்டுமொத்த தொழிலும் முழுவதுமாக முடங்கிப் போய்விடும்!

## சிறு – குறு தொழில் துறையினர் அச்சம்!

திருப்பூர், மே 30 -

ஆட்சிக்கு வந்த பிறகு, கால அவகாசம் கொடுங்கள் என்று தட்டிக்கழித்தால், அரசு உதவி செய்ய முன்வருவதற்குள் திருப்பூ ரின் ஒட்டுமொத்த தொழிலும் முழுவதுமா முடங்கி போய் விடும். திருப்பூரின் சிறு, குறு பின்னலாடை நிறுவனங்கள் மற்றும் விசைத்தறி தொழிலை மீட்டெடுக்க, நெசவாளர் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.30 ஆயிரம் வழங்கப்படும் என்ற த.வெ.க. வின் தேர்தல் நேர அறிவிப்பின்படி ரூ.30 ஆயிரம் நிதியுதவி கிடைக்குமா? நம்பிக்கை இல்லாமல் சிறு, குறு தொழில் துறையினர் உள்ளனர்.

விவசாயிகளை ஏமாற்றிய விஜய் அரசின் அடுத்த குறி நெசவாளர்களா? ரூ.30 ஆயிரம் நிதியுதவி கிடைக்குமா? நம்பிக்கை இல்லாமல் சிறு, குறு தொழில் துறையினர் உள்ளனர். மின் கட்டணச்சுமை மற்றும் நூல் விலை உயர்வை குறைக்க நெசவாளர் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.30 ஆயிரம் நேரடி நிதியுதவி வழங்கப்படும் என்ற தவெக அரசின் தேர்தல் வாக்குறுதி, திருப்பூரின் விசைத்தறி மற்றும் பின்னலாடைத் துறையினர் மத்தியில் பெரும் சந்தேகத்தையும், அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் நேரத்தில் தவெக கொடுத்த கவர்ச்சிகரமான வாக்குறுதிகள், ஆட்சிக்கு வந்த பின் வெளியான அதிகாரப்பூர்வ அறிவிப்புகளில் அப்படியே தலைகீழாக மாறி உள்ளதை மக்கள், விவசாயிகள் உணர்ந்து வருகின்றனர்.

ஏற்கனவே தவெக தனது தேர்தல் அறிக்கையில், சிறு, குறு விவசாயிகள் பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என்றும், மாதம் தோறும் 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும் என்றும் தெரிவித்திருந்தது. ஆனால், ஆட்சி பொறுப்பேற்ற பிறகு பல்வேறு கடுமையான வெளியான அறிவிப்புகள், நிபந்தனைகளுட னும் சுருக்கப்பட்ட வடிவத்திலுமே வெளியாகி பொதுமக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தின.

தேர்தல் வாக்குறுதிக்கும் தற்போதைய அரசாணைக்கும் இடையே உள்ள முரண்பாடுகளால் த.வெ.க. அரசு தங்களை ஏமாற்றிவிட்டதாக விவசாயிகள் உட்பட பலதரப்பினரும் பகிரங்கமாக குற்றம்சாட்டி வருகின்றனர்.

இந்த சூழலில் நூல் விலை ஏற்ற இறக்கங்களாலும், மின் கட்டண உயர்வாலும் நஷ்டத்தில் இயங்கி வரும் திருப்பூரின் சிறு, குறு பின்னலாடை நிறுவனங்கள் மற்றும் விசைத்தறி தொழிலை மீட்டெடுக்க, நெசவாளர் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.30 ஆயிரம் வழங்கப்படும் என்ற தவெகவின் தேர்தல் நேர அறிவிப்பும், முந்தைய திட்டங்களை போல வெறும் காகித வடிவ ஏமாற்று வேலையாக முடிந்து விடுமோ? என்ற பலத்த சந்தேகம் எழுந்துள்ளது.

விசைத்தறி மற்றும் கைத்தறி தொழிலை மட்டுமே நம்பியுள்ள சாமானிய குடும்பங்களின் மாதாந்திர மின் கட்டணத்தை ஓரளவுக்கு சமாளிக்க இந்த ரூ.30,000 நேரடி பணப் பரிமாற்றம் உதவும் என்றாலும், ஏற்கனவே கொடுத்த வாக்குறுதிகளிலேயே நிபந்தனைகளை புகுத்தி ஏமாற்றிய தவெக அரசு இந்த திட்டத்தையாவது எந்த வித நிபந்தனைகளும் இன்றி முழுமையாக செயல்படுத்துமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதுகுறித்து திருப்பூரைச் சேர்ந்த சிறு, குறு உற்பத்தியாளர்கள் கூறுகையில், “முதலமைச்சர் முதல் அமைச்சர்கள் வரை அனைவரும் நாங்கள் இப்போதுதான் பதவியேற்றுள்ளோம், தேர்தல் வாக்குறுதிகளை நிறை வேற்ற கால அவகாசம் கொடுங்கள் என பொது வெளியில் கூறி வருகின்றனர், ஆனால், திருப்பூரின் பின்னலாடை மற்றும் நெசவுத் தொழிலில் உள்ள கஷ்டங்கள், நஷ்டங்கள் என்பதை அவர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

அந்த எதார்த்த நிலையை புரிந்து கொண்டுதான் தேர்தலின் போது இந்த வாக்குறுதிகளை வழங்கியுள்ளார்கள். இப்போது ஆட்சிக்கு வந்த பிறகு, கால அவகாசம் கொடுங்கள் என்று தட்டிக்கழித்தால், அரசு உதவி செய்ய முன்வருவதற்குள் திருப்பூரின் ஒட்டுமொத்த தொழிலும் முழுவதுமா முடங்கி போய்விடும். தற்காலிக காரணங்களை சொல்லாமல், இந்த வாக்குறுதியிலாவது ஏமாற்றாமல் முழு மையாக, உடனடியாக நிறைவேற்ற வேண்டும்” என்றனர்.

# அரியலூர் மாவட்டப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எஸ்.சிவசங்கர் எம்.எல்.ஏ. அறிக்கை!



*அரியலூர், மே 30 -*

*அரியலூர் மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை ( 31.05. 2026 - ஞாயிற்றுக் கிழமை) மாலை 0500 மணியளவில் அரியலூர் புறவழிச் சாலையில் உள்ள ரிதன்யா மஹாலில் கழக சட்டத்திட்ட திருத்தக் குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் நடைபெறுகிறது.*

*அதுசமயம் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட அணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*பொருள்: 1, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா!*

*2, கழக ஆக்கப் பணிகள்.*

*அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.*

### செங்கல்பட்டு – ஓர்க்காட்பேட்டை – ஆத்தூர்

# பாலாற்று மேம்பாலத்தில் விபத்தை ஏற்படுத்தும் மண் குவியல்!

## அகற்ற நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை!

செங்கல்பட்டு, மே 30 –

பழத்தோட்டம் ஓர்க்காட்பேட்டை மேம்பாலத்தில் விபத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ள மண் குவியல்களை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்துள்ளது. ஓர்க்காட்பேட்டை– ஆத்தூர் பழத்தோட்டம் இடையே கடந்த 30 வருடங்களுக்கு முன்பு பாலாற்றின் குறுக்கே கிராவல் சாலை அமைக்கப்பட்டு இருந்தது.

இந்த சாலை வழியாக ஓர்க்காட்பேட்டை, காவி தண்டலம், காவூர், விச்சூர், திருவானைக்கோயில், பினாயூர், மாம்பாக்கம், சித்தன காவூர், பழவேரி, பேரணக்காவூர், சாத்தனஞ்சேரி, சீதனஞ்சேரி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்தவர்கள் செங்கல்பட்டு பகுதிக்கு பல்வேறு வேலைகளுக்காக வந்து சென்று கொண்டி ருந்தனர்.

அவ்வப்போது பாலாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு இந்த சாலை முழுவதுமாக துண்டிக்கப்படும். இதனால் ஓர்க்காட்பேட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள பொதுமக்கள் செங்கல்பட்டுக்கு 25 கிலோ மீட்டர் சுற்றிக் கொண்டு வருவது வழக்கம். இந்த நிலையில் பொதுமக்கள் வைத்த கோரிக்கையின் பேரில் கடந்த 15 வருடங்களுக்கு முன்பு நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ.25 கோடியில் ஓர்க்காட்பேட்டைஆத்தூர் இடையே பாலாற்று மேம்பாலம் கட்டப்பட்டது.

இதனால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் சிரமமின்றி செங்கல்பட்டு பகுதிக்கும், செங்கல்பட்டில் இருந்து ரயில் மூலம் சென்னை போன்ற பகுதிகளுக்கும் சென்று வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு ஓர்க்காட்பேட்டை, மையூர், பிலாப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் ஏரி மண் டெண்டர் விடப்பட்டதால் அளவுக்கு அதிகமான ஏரி மணல் ஏற்றிக் கொண்டு கனரக லாரிகள் இந்த பாலத்தை பயன்படுத்திச் செல்கின்றன.

இதனால் உபரியான ஏரி மண் பாலத்தில் கொட்டி பாலத்தின் இரு புறங்களிலும் மண் குவியலாக மாறி உள்ளது. பாலத்தில் உள்ள மழைநீர் வெளியேறும் குழாய்களை ஏரி மண் அடைத்து விடுவதால் அவ்வப்போது பெய்யும் மழையால் தேங்கும் மழை நீர் கீழே செல்ல முடியாமல் பாலத்திலேயே தேங்கி நிற்கிறது.

மண் குயிலோடு சேர்ந்து மழை நீரும் வடியாமல் பாலத்தின் மீது தேங்குவதால் இரவு நேரங்களில் பாலத்தை கடக்கும் பொதுமக்கள் சேறும், சகதியிலும் சிக்கி கீழே விழுந்து காயமடைந்து விபத்து அதிகரிக்கும் நிலை ஏற்படுகிறது.

எனவே மேம்பாலத்தின் மேல் குவிந்துள்ள மண்குவியல்களை அகற்றி மழைநீர் வடிவதற்கு உரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும், வெயில் நேரங்களில் பாலத்தின் மீதுள்ள மண் குவியல்கள் வாகனங்கள் செல்லும்போது காற்றில் தூசியாக மாறி வாகன ஓட்டிகளின் கண்களில் படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அளவுக்கு அதிகமாக லாரிகளில் மண் எடுத்துச் செல்வத்தை தடுக்க வேண்டும், மேம்பாலத்தில் குவிந்துள்ள மண் குவியல்களை அகற்ற வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; ‘தேர்ந்தெடுத்த மக்கள் விருப்பத்திற்கு மாறாக எம்.எல்.ஏ.க்களை விலை பேசி, த.வெ.க. தற்போது நடத்துவது குதிரைபேர அரசியல் அல்ல; கழுதைபேர அரசியல்...’ என்று கூறியிருக்கிறாரே ஒன்றியபா.ஜ.க. அரசு முன்னாள் அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; நரிகளைப் பரிகளாக்கியது பழைய புராணக் கதை.**

**பரிகளை அதாவது குதிரைகளை, கழுதைகளாக்கியது ராதாகிருஷ்ணன் கதை.**

**அவருடைய கோபம் அனைவர்க்கும் புரிகிறது.**

**பல்வேறு அழுத்தங்களுக்கும், ஆசைகளுக்கும் ஆட்பட்டு கட்சி மாறும் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை கழுதைகளோடு ஒப்பிட்டுச் சொல்கிறாரா பொன்னார் ?**

# துயர சக்தியின் துர்நாற்ற அரசியல்...

**தூ**ய சக்தி என்று சொல்லி தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றி திரைக்கவர்ச்சியால் பிடித்த ஆட்சியைத் தக்க வைக்க போராடும் துயர சக்தியின் முகத்திரை கிழிந்து தொங்குகிறது. அதன் அரசியல் துர்நாற்றத்தை சகிக்க முடியாமல் நல்லோரும் நாட்டோரும் மூச்சுத் திணறி வருகின்றனர்.

இந்தத் தருணத்தில் இரண்டு செய்திகளை மக்களுக்கு நினைவூட்டுவது நம் கடமை. ஒன்று, தி.மு.க. தலித்துகளுக்கு என்ன செய்தது ? இரண்டு, தற்போது நடைபெறும் துயர சக்தியின் பொய் பித்தலாட்டங்களை மக்களிடம் அம்பலப்படுத்துவது. இந்த இரண்டுமே இந்த கட்டுரையின் நோக்கம்.

2016 டிசம்பர் 5 ம் தேதி ஜெயலலிதா மரணமடைந்த உடன் அ.தி.மு.க.வில் பிளவு ஏற்பட்டதை நாம் நன்கறிவோம். அப்போது, தி.மு.க. கூட்டணிக்கு சட்டப்பேரவையில் 89 இடங்கள் இருந்தன. பெரும்பான்மைக்குத் தேவையான இடங்களைப் பெற அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை தி.மு.க. தன் பக்கம் இழுக்கும் என்று பலரும் எண்ணிய வேளையில், அரசியல் அறத்தோடு அது குறித்து துளியும் சிந்திக்காமல் எதிர்க்கட்சியாக 4 ஆண்டு காலம் பொறுமையாக நிதானமாக அதே வேளை அன்றைய அரசின் மக்கள் விரோதப் போக்கிற்கு எதிராக உறுதியாக சண்டை செய்து மக்கள் பக்கம் நின்றார் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள்.

2021 தேர்தலில் ஸ்டாலின் முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டு மக்கள் ஏற்றுக் கொண்டதன் அடிப்படையிலேயே தி.மு.க. ஆட்சி அரியணையில் அமர்ந்தது. அந்த தி.மு.க.வை கடும் விமர்சனத்திற்கு உட்படுத்தி விட்டு தன்னை தூய சக்தி என்று தம்பட்டம் அடித்த துயர சக்தி இன்று ஆட்சியில் அமவருவதற்கு, பா.ஜ.க. கூட்டணியில் இடம்பெற்ற அ.ம.மு.க. ஆதரவையும், தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் ஆதரவையும் பெற்றுக் கொண்டு வெட்கமின்றித் திரிகிறது.

அதோடு நில்லாமல், அ.தி.மு.க.வின் எம்.எல்.ஏ.க்களை தன் பக்கம் இழுக்கும் குதிரை பேரத்தைத் தொடங்கியது. அதற்கு சட்ட ரீதியில் கடும் எதிர்ப்பு வந்த உடன், அ.தி.மு.க.வை உடைத்து அதன் எம்.எல்.ஏ.க்களை ராஜினாமா செய்ய வைத்து தன் கட்சியில் இணைத்துக் கொண்டுள்ளது. கர்நாடகாவிலும், அருணாச்சலப் பிரதேசத்திலும் காங்கிரசுக்கு எதிராக பா.ஜ.க. இதைச் செய்தபோது, கத்திக் கதறிய காங்கிரஸ் தமிழ்நாட்டில் துயர சக்தியுடன் கைகோர்த்த ஒரே காரணத்தால் இதை வெட்கமின்றி ஆதரிக்கிறது.

இந்த துயர சக்தி ஆட்சிக்கு வந்த 15 நாட்களில் 25 கொலை, 4 இரட்டைக் கொலை, 19 பாலியல் குற்றங்கள் என தமிழ்நாடே குற்ற பூமியாக மாறிப் போயுள்ளதைக் கண்டு குமுறுகின்றனர் தமிழக மக்கள்.

மறு புறம் தொடரும் மின்தடையால் மக்கள் சாலைகளில் போராடத் தொடங்கியுள்ளனர். இவற்றை எல்லாம் மடை மாற்றுவதற்கு, வேளாண் கடன் தள்ளுபடி என்று வந்த அறிவிப்பும் மக்களை ஏமாற்றும் மலிவான அரசியல் என்பதைக் கண்டறிந்து விவசாயிகள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

**தி.செந்தில் வேல்**
*மூத்த ஊடகவியலாளர்*
*தமிழ் கேள்வி*



ஆட்சிக்கு வந்த உடனேயே இதையெல்லாம் சரி செய்ய முடியுமா , கொஞ்சம் நேரம் கொடுக்க வேண்டும் என்று துயர சக்திக்காக விசிலடிக்கும் போலி நடுநிலையாளர்கள் கொந்தளிக்கின்றனர். தி.மு.க. தலைவரும் அரசியல் மாண்போடு 6 மாத காலம் மிக முக்கியமான பிரச்சினைகள் தவிர மற்ற வகைகளில் இந்த அரசுக்கு எதிராக கடும் விமர்சனங்களை ஏதும் வைக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டார்.

வாக்குறுதிகளை உடனே ஏன் நிறைவேற்றவில்லை என்று இங்கே யாரும் கேட்கவில்லை. மாறாக, துயரசக்தியின் தொண்டர்கள் செங்கல் சூளை உரிமையாளர்களை மிரட்டி மாமூல் கேட்பது சரியா என்று கேட்கிறோம். ?

பழக்கடை உரிமையாளரை மிரட்டி பணம் பறிக்க முயற்சிப்பது முறையா என்று கேட்கிறோம். ?

ஆய்வு என்ற பெயரில், யாரென்றெ தெரியாத எந்தப் பொறுப்பிலும் இல்லாத துயர சக்தியின் விசிலடிச்சான் குஞ்சுகள், அரசு மருத்துவமனைகளிலும், அரசு அலுவலகங்களிலும், உள்ளாட்சி அலுவலகங்களிலும் அடாவடித் தனம் செய்வது ஏற்புடையதா என்று வினவுகிறோம். ?

சென்னையில் சைதாப்பேட்டையில் நகர்ப்புற மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்பில் தலித்துகளுக்கு மட்டும் தனியாக ஒரு பிரிவு வீடுகளை ஒதுக்கீடு செய்யும் விதமாக இந்த துயர சக்தி ஆட்சியில் நடைபெற்ற குலுக்கல் முறையிலான பங்கீட்டைக் கண்டித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த தி.மு.க. ஆட்சியில் இதே போல் தலித்துகளுக்கு மட்டும் தனியாக ஒரு பிரிவை ஒதுக்கி அவர்களுக்கு அந்தப் பிரிவில் உள்ள வீடுகளை ஒதுக்கும்படியும், மற்ற சமூகத்தினருக்கு தனியாக ஒரு பிரிவு குடியிருப்புகளை ஒதுக்கும்படியும் சிலர் பிரச்சினை செய்தபோது, அன்றைய சுகாதாரத்துறை அமைச்சர் மா.சு அவர்களும், அன்றைய திராவிட மாடல் அரசின் அதிகாரிகளும் சாதி அடிப்படையில் வீடுகள் ஒதுக்கீடு என்பது சமூக நீதிக்கு எதிரானது என்று திட்டவட்டமாக அதை மறுத்துவிட்டனர்.

ஆனால், இன்று அந்த குடியிருப்பில், சாதி அடிப்படையில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதைத் தட்டிக் கேட்ட தலித் தோழர்களை துயரசக்தியின் ஆட்கள் மிரட்டித் தாக்கியதாகவும் வேதனை தெரிவிக்கின்றனர் அப்பகுதி மக்கள்.

**தி.மு.க. ஆட்சி ஏதோ தலித்துகளுக்கு எதிரான ஆட்சி என்பது போன்ற போலித்தோற்றத்தை உள்நோக்கத்தோடு ஏற்படுத்திய போலி போராளிகள் யாரும் இதை இந்த நிமிடம் வரைக் கண்டிக்கவில்லை. இப்போதும் பாதிக்கப்பட்டோருக்கு களத்திற்கு முதலில் சென்று அவர்களோடு நிற்பது தி.மு.க.தான். இந்த நேரத்தில் சிலவற்றை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். சமூக நீதிப் பார்வையில் பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகங்களின் மேம்பாட்டிற்கு தி.மு.க. செய்தது போல் தொலைநோக்குப் பார்வை கொண்ட திட்டங்களை இந்த மண்ணில் எந்த அரசியல் கட்சியும் செய்ததில்லை என்பதே மறுக்க இயலாத உண்மை.**

16 விழுக்காடாக இருந்த பட்டியல் சமூகத்தினருக்கான இட ஒதுக்கீட்டை 18 விழுக்காடாக மாற்றித் தந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர். மாற்றித் தந்த இயக்கம் தி.மு.க.

அருந்ததியர்களுக்கான உள் இட ஒதுக்கீடாக 3 விழுக்காட்டை தந்து அவர்களில் பலரும் மருத்துவர்களாக, பொறியாளர்களாக, பேராசிரியர்களாக உயர வித்திட்டது தி.மு.க.

மகாராஷ்டிர மாநிலத்தில் மரத்வாடா பல்கலைக்கழகத்திற்கு பாபா சாகேப் அம்பேத்கர் பெயரை வைக்க முடிவு செய்தபோது அதற்கு எதிராக பெரும் கலவரம் வெடித்தது. பலரும் மாண்டு போனார்கள். அந்த காயத்திற்கு மருந்திடுவது போல், 1989 ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த உடன் தமிழ்நாட்டில் சென்னை சட்டக்கல்லூரிக்கு அம்பேத்கர் பெயரை சூட்டி அழகு பார்த்தவர் கலைஞர்.

ஆசியாவிலேயே முதன்முறையாக சட்டத்திற்கு என்று தனியாக ஒரு பல்கலைக்கழகத்தை தமிழ்நாட்டில் நிறுவி அதற்கு அம்பேத்கர் பெயரை வைத்த இயக்கம் தி.மு.க.

ஊரும் சேரியுமாக பிரிந்து கிடக்கும் சமூகத்தை ஒன்றாக்கிட வேண்டும். ஓரிடத்தில் எல்லோரும் வாழ்ந்திட வேண்டும் என்பதை மனதில் கொண்டு தொடங்கப்பட்ட திட்டம்தான் சமத்துவபுரங்கள். தொடங்கியது தி.மு.க. ஆட்சியில்

சென்னையில் அம்பேத்கருக்கான மணிமண்டபம் திறக்கப்பட்டது தி.மு.க. ஆட்சியில்தான். திராவிட மாடல் ஆட்சியில் அம்பேத்கர் பிறந்த நாளை சமத்துவ நாளாக அறிவித்து அன்று அனைவரையும் உறுதி மொழி எடுக்கும் படி செய்தவர் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின்.

அம்பேத்கர் அயலக கல்வி உதவித் தொகை திட்டத்தின் மூலம் 400 க்கும் மேற்பட்ட பட்டியல் சமூக இளைஞர்களை உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள புகழ்பெற்ற கல்வி நிலையங்களில் உயர்கல்விக்காக அனுப்பிய இயக்கம் தி.மு.க.

பாப்பாப்பட்டி , கீரிப்பட்டி ஆகிய கிராமங்கள் தனித் தொகுதியாக அறிவிக்கப்பட்ட நிலையில், அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அங்கு உள்ளாட்சித் தேர்தலே நடத்த முடியாத சூழலில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்த உடன் சுழற்சி முறையில் அந்த கிராமங்களை பொதுத் தொகுதியாக மாற்றும் எல்லா வாய்ப்புகளும் இருந்தபோது மீண்டும் அவற்றை தனித் தொகுதியாக அறிவித்து அங்கே தேர்தலை நடத்தி பட்டியல் சமூகத்தைச் சேர்ந்தவர்களை தலைவர்களாக பொறுப்பேற்கச் செய்ததோடு அவர்களை சென்னைக்கு வரவழைத்து பாராட்டு விழாவும் நடத்தியது தி.மு.க. அரசு.

கடந்த திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதும், முதலமைச்சராக பொறுப்பேற்ற மு.க.ஸ்டாலின் அவர்கள் அவருடைய முதல் கிராம சபை கூட்டத்தை இதே பாப்பாப்பட்டியில் நடத்தி அதில் அவரும் கலந்து கொண்டார்.

இப்படி தலித்துகளுக்கு மட்டுமல்ல, பெண்களுக்கான சொத்துரிமை, பெண்களை காவல்துறையில் பணியில் அமர்த்தியது, அனைத்து சாதியினரும் அர்ச்சகர்கள், திருநர்களுக்கான நலவாரியம், மாற்றுத்திறனாளிகளுக்கான அரசியல் பிரதிநிதித்துவம் என்று எல்லா வகைகளிலும் விளிம்பு நிலை மக்களோடும் அவர்களின் வாழ்வு மேம்பட வேண்டும் என்றும் திட்டங்களைத் தீட்டிய அரசுதான் தி.மு.க. அரசு.

திட்டங்கள் மட்டுமல்ல, அரசியல் பிரதிநிதித்துவத்தை வழங்குவதிலும் தி.மு.க.வே முன்னோடி. 1984 ல் அப்போது பொதுத்தொகுதியாக இருந்த நீலகிரி நாடாளுமன்றத் தொகுதியில் சி.டி.தண்டபாணி என்ற தலித் ஒருவரை வேட்பாளராக களமிறக்கியது தி.மு.க.

1967 ல் ஆட்சிப் பொறுப்பேற்ற போதே தலித் சமூகத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சத்யவாணி முத்து அவர்களை செய்தித்துறை அமைச்சராக்கிய இயக்கம் திமுக. அப்போது தொடங்கிய தலித்துகளுக்கான அந்த அரசியல் அங்கீகாரப் பயணம் கடந்த திமுக ஆட்சி வரை தொடரவே செய்தது.

கடந்த திமுக ஆட்சியில், உயர்கல்வித் துறை அமைச்சராக முனைவர் கோ.வி.செழியன் அவர்களும், தொழிலாளர் நலத்துறை அமைச்சராக சி.வெ.கணேசன் அவர்களும், வனத்துறை அமைச்சராக மதிவேந்தன் அவர்களும், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சராக கயல்விழி செல்வராஜ் அவர்களும் பொறுப்பு வகித்தனர்.

அரசு அதிகாரத்தில் மட்டுமின்றி உட்கட்சி அதிகாரத்திலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர்களில் கண்டிப்பாக ஒரு பெண்ணும், கண்டிப்பாக ஒரு தலித்தும் இடம்பெற வேண்டும் என்பது விதி.

**இப்படி எல்லா வகைகளிலும், விளிம்பு நிலை மக்களுக்காக திட்டங்கள் தீட்டிய ஒரு அரசுக்கு எதிராக, திமுக என்ற பேரியக்க த்திற்கு எதிராக பெரும் பொருளாதார பலத்தை செலவிட்டு திட்டமிட்டு அவதூறுகளை கட்டவிழ்த்து விட்டனர் சிலர். அதில், அவர்கள் வெற்றி பெற்றதாகவும் உணரலாம். ஆனால், திமுக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் சமீபத்தில் சொன்னதைப் போல், சிலரை பல காலம் ஏமாற்றலாம். பலரை சில காலம் ஏமாற்றலாம். எல்லோரையும் எல்லா காலமும் ஏமாற்ற முடியாது என்பதே ஐயத்திற்கிடமில்லா உண்மை.**

குதிரை பேரம் செய்து ஆட்சி அரியணையில் வீற்றிருக்கும் இந்த துயர சக்தியை மக்கள் விரைவில் தூக்கி எறிவார்கள். காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு என்பதை மீண்டும் உரக்கச் சொல்வார்கள் . அந்த நாள் தொலைவில் இல்லை.